WORDSMITH
BEYOND LEARNING

**WORDSMITH LEARNING HUB PTE LTD**

# Sec 4

## NORMAL ACADEMIC SECONDARY

# TAMIL

## சாதாரண நிலை உயர்நிலை பள்ளி

UNAUTHORISED COPYING PROHIBITED

**SEC 4- NA EXAM REVISION WORKSHEETS (PAPER 2)**
**உயர்நிலை 4- சாதாரண நிலை தேர்வுப் பயிற்சித்தாள் (தாள் 2)**

# பொருளடக்கம்


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1 | தேர்வுத்தாள் 1 | 1 - 10 |
| 2 | தேர்வுத்தாள் 2 | 11 - 20 |
| 3 | தேர்வுத்தாள் 3 | 21 - 30 |
| 4 | தேர்வுத்தாள் 4 | 31 - 40 |
| 5 | தேர்வுத்தாள் 5 | 41 - 50 |
| 6 | தேர்வுத்தாள் 6 | 51 - 60 |
| 7 | தேர்வுத்தாள் 7 | 61 - 70 |
| 8 | தேர்வுத்தாள் 8 | 71 - 80 |
| 9 | தேர்வுத்தாள் 9 | 81 - 90 |
| 10 | தேர்வுத்தாள் 10 | 91 - 100 |
| 11 | தேர்வுத்தாள் 11 | 101 - 110 |
| 12 | தேர்வுத்தாள் 12 | 111 - 120 |
| 13 | அருஞ்சொற்கள் (தேர்வுத்தாள் 1 to 12) | 121 - 129 |
| 14 | விடைத்தாள் | 130 - 150 |

# தேர்வுத்தாள் 1

| | |
|---|---|
| | 70 |

**'அ' பிரிவு**

**A1 மரபுத்தொடர்களும் இணைமொழிகளும் (10 மதிப்பெண்கள்)**

**கீழ்க்காணும் வாக்கியங்களில் கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கேற்ற சொற்றொடர்கள் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கேற்ற மிகப் பொருத்தமான சொற்றொடரைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

Q1 ஒரு காலத்தில் ______________________________ வாழ்ந்த குமார், இன்று **சூதாட்டத்தின்** தன் சொத்துகளை இழந்தான்.

Q2 ______________________________ நம்மால் முடிந்ததைக் கொடுத்து உதவுவது சிறந்த பண்பாகும்.

Q3 எப்பொழுதும் ______________________________ பேசாமல் தன் மனத்தில் பட்டதை முகத்திற்கு நேராகப் பேசுவதன்வழி பிறருடன் நட்பை வளர்த்துக் கொள்ள முடியும்.

Q4 ராமு சரியாக ______________________________ இல்லாமல் உடல் **மெலிந்து** காணப்பட்டான்.

Q5 சாலை ஓரத்தில் **மின்சார கம்பிகள்** ______________________________ இருந்தன.

| | |
|---|---|
| (A) ஓய்வு ஒழிச்சல்களை | (B) சீராட்டி பாராட்டி |
| (C) சாடை மாடையாக | (D) குறுக்கும் நெடுக்குமாக |
| (E) கண்டதையும் கேட்டதையும் | (F) அவசரக்குடுக்கையாக |
| (G) ஊண் உறக்கம் | (H) சீரும் சிறப்புமாக |
| (I) ஏழை எளியோருக்கு | (J) இளைத்து களைத்து |

**A2 முன்னுணர்வுக் கருத்தறிதல் (10 மதிப்பெண்கள்)**

**கீழ்வரும் பகுதியில் கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கேற்ற அமைப்புச் சொற்கள் பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கேற்ற மிகப்பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

நேரம் பொன் போன்றது கடமை கண் போன்றது என்பார்கள். நாம் கடமையைச் சரிவரச் செய்ய வேண்டும் என்றால் நேரத்தை நன்றாக Q6. ______________________________ வேண்டும். காலம் ஓடும் ஓட்டத்திற்கு நாமும் இணைந்து ஓடும் சூழலில் வாழ்ந்து Q7. ______________________________. இன்றைய இளைஞர்கள் தங்களை உயர்த்திக் கொள்வதற்காகப் பல நடவடிக்கைகளை நம் அரசாங்கம் ஏற்பாடு செய்துள்ளன. எடுத்துக்காட்டாக, சிறு வயதிலேயே வியாபாரத்தில் ஈடுபடுவது, போட்டி விளையாட்டுகளில் ஈடுபடுவது, போன்ற பலவற்றை இளைஞர்களுக்காக Q8. ______________________________ செய்துள்ளார்கள். பெரும்பாலான இளைஞர்கள் இன்று பேராங்காடிகளிலும் திரையரங்குகளிலும் கேளிக்கை இடங்களிலும் அதிகமாகக் காணப்படுகின்றனர். இருப்பினும், முழு நேரமும் இம்மாதிரியான இடங்களில் நாள்களைக் கழிப்பது நேரத்தைச் செலவழிப்பதே ஆகும். இதனைப் **பதின்ம வயதினர்**கள் Q9. ______________________________ உணர வேண்டும். இன்றைய இளைஞர்கள் நாளைய Q10. ______________________________ என்பார்கள். அதை நன்கு உணர்ந்து இளைஞர்கள் நேரத்தைச் செலவு செய்யாமல் அடுத்து என்ன நல்ல காரியங்களைச் செய்ய வேண்டும் என்பதை அறிந்து செயல்படுவது **சாலச்** சிறந்தது.

| | |
|---|---|
| (A) கட்டாயம் | (B) தலைவர்கள் |
| (C) உண்மையாக | (D) ஏற்பாடு |
| (E) அறிந்திருக்கிறோம் | (F) செலுத்த |
| (G) கொண்டிருக்கிறோம் | (H) இதனால் |
| (I) பெற்றோர்கள் | (J) பயன்படுத்த |

**‘ஆ’ பிரிவு**

**B3 தெரிவுவிடைக் கருத்தறிதல் (10 மதிப்பெண்கள்)**

**பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து, அதனடியிற் காணும் வினாக்களுக்கு விடை தருக. வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் நான்கு தெரிவுகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை எழுதுக.**

**பனுவல் 1**

**இட்லி**

இன்று மனிதன் உண்ணும் உணவில் மிகவும் ஆரோக்கியமான உணவாக இட்லி கருதப்படுகிறது.



அறிவியல் **ஆராய்ச்சி**யின்படி ஒரு நாள் காலை உணவாக இட்லி உண்பது மிகவும் நல்லது என்கிறார்கள். உணவைக் கொடுத்தவுடன் **உட்கொள்ளும்** நாம் அதன் வரலாற்றைக் கேட்டு அறிந்து கொள்வதை மறந்துவிடுகிறோம். குறிப்பாக இந்தியர்களுக்கிடையே இந்த இட்லி எனும் உணவு மிகவும் **பிரபலமானது.**

காலங்கள் மாற இட்லி செய்யும் முறையும் மாறிப்போனது. **பண்டைய காலங்களில்** செய்த இட்லியும் இக்காலத்தில் செய்யப்படும் இட்லியும் மிகவும் வேறுபட்டுள்ளது என்பது ஆய்வாளர்கள் கூறுகின்றனர். **அண்மை**யில் இந்த உணவை இட்லி என்று அழைக்கிறோம். இட்லியைப் பொதுவாக அரிசி மாவும் உளுத்தமாவும் கொண்டு அரைத்து உருவாக்குவார்கள். இது ஆவியில் வேக வைத்துச் செய்யப்படுகிறது. இதை உண்பதால் நம் உடலில் ஊட்டசத்து (Nutrition) அதிகரிக்கும் என்பது ஆய்வின் முடிவாகும். எனவே, இட்லி என்பது உலகின் **அங்கீகரிக்கப்பட்ட** ஓர் உணவாகும்.

Q11 எதை நாம் மறந்துவிடுகிறோம்?

1. இட்லி ஆரோக்கியமான உணவு என்பதை
2. இட்லியைக் காலை உணவாக உண்பதை
3. இட்லி பிரபலமானது என்பதை
4. வரலாற்றைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதை ( )

Q12 ஆய்வின் முடிவில் இட்லியைப் பற்றி என்ன கூறியுள்ளார்கள்?

1. ஆவியில் வேகவைத்துச் செய்யப்படுகிறது
2. இட்லியை உண்டால் உடல் வலிமை பெறும்
3. உலகின் அங்கீகரிக்கப்பட்ட உணவு
4. உடலில் ஊட்டச்சத்து அதிகரிக்கும் ( )

**பகுதி 2**

## மூத்த குடி தமிழ்க் குடி



உலகம் தோன்றி இன்று வரை 6500 மொழிகள் பல கோடி மக்களால் பேசப்பட்டு வருகின்றன. ஆனால், அனைத்து மொழிகளுக்கும் மூத்த மொழியாகத் தமிழ் மொழி திகழ்கிறது என்பதற்குத் தமிழர்களாகிய நாம் பெருமை கொள்ள வேண்டும்.

தமிழர்கள் பேசும் இந்த மொழியில் தமிழ் எழுத்துக்கள் மட்டும் மொத்தம் 247 ஆகும். மற்ற மொழிகளை விட நம் மொழியிலேயே அதிக எழுத்துக்கள் இருக்கின்றன. தொடர்ந்து, நம் மொழியில் உருவாக்கப்பட்ட இலக்கணம்தான் இன்று பல மொழிகளுக்கு அடிப்படையாக இருக்கிறது. முன்பு காலத்தில் அரசர்களும் புலவர்களும் தமிழை வாழ வைக்க மூன்று சங்கமாக உருவாக்கிப் பாதுகாத்தார்கள். இவ்வாறு அழியாமல் பாதுகாத்த நம் மொழியை நாமும் எந்த ஒரு **பாதிப்பும்** இல்லாமல் பாதுகாத்து அடுத்து வரும் **சந்ததியினருக்குக்** கொடுப்பது நமது கடமையே ஆகும்.

Q13 தமிழர்கள் ஏன் பெருமை கொள்ள வேண்டும்?

1. மூத்த மொழி என்பதால்
2. மூத்த இனம் என்பதால்
3. மூத்தவர்கள் என்பதால்
4. மூத்த மதம் என்பதால் ( )

Q14 நமது மொழியில் உள்ள எந்தக்கூறு பல மொழிகளுக்கு அடிப்படையாகத் திகழ்கிறது?

1. எழுத்துக்கள்
2. இலக்கியம்
3. இலக்கணம்
4. மூன்று சங்கம் ( )

Q15 எது நமது கடமை என்று கட்டுரையாசிரியர் கூறுகிறார்?

1. ஒரு மொழி சிதையாமல் அடுத்த சந்ததியினரிடம் கொடுப்பது

2. அடுத்த சந்ததியினருக்கு மொழியைக் கொடுப்பது
3. ஒரு மொழியை நன்றாகப் பார்த்துக் கொள்வது
4. ஒரு மொழியை அழியாமல் வைத்திருப்ப ( )

**B4 பிழை திருத்தம் (10 மதிப்பெண்கள்)**

**கீழ்க்காணும் பகுதியின் இடப்பக்கத்தில் ஐந்து வினாக்களின் எண்கள் இடம் பெற்றுள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் எதிரிலுள்ள வரியில் கோடிடப்பட்டுள்ள சொல் பிழையாக உள்ளது. அந்தப் பிழையான சொற்களைத் திருத்தி அச்சொற்களின் சரியான வடிவத்தை எழுதவும்**.

| | |
|---|---|
| Q16<br><br><br><br>Q17<br><br>Q18<br><br><br>Q19<br>Q20 | குழந்தைகள் தினத்தை நாம் கொண்டாடுவதன் நோக்கம் சிறந்த கல்வி, சிறந்த வாழ்வாதாரம் குழந்தைகளுக்கு அடிப்படை உரிமையாகக் கிடைக்க செய்கின்ற ஆகும். சரியான வழியில் வளர்வதற்கு அவர்களுக்கு உரிமை உண்டு என்ற கருத்தை நிலைநிறுத்தி அவர்களுக்குச் சுதந்திரத்தையும் வசதியையும் கொடுக்கும் ஒரு கட்டுக்கோப்பான தேசத்தைக் கட்டமைப்பது நமது கடமையாகிறது. இருப்பினும், அந்தக் கடமையை ஒவ்வொரு அரசு அதிகாரிகளுக்கும் குடிமக்களுக்கும் தெரிவிக்கவே ஆண்டு தோறும் குழந்தைகள் தினம் அரசாங்கத்தால் கொண்டாடப்பட்டது. சரியான வழியில் வளர்வதற்கு அவர்கள் அவர்களுக்கு உரிமை உண்டு என்ற கருத்தை நிலைநிறுத்தி அவர்களுக்கு எடுத்துக்கூற வேண்டும். நம் குழந்தைகளை நாட்டின் செல்வமான அங்கீகரித்து அவர்களைப் பாதுகாத்து அவர்களின் எதிர்காலத்தை அவர்களே தீர்மானிக்கும் திறனையும் வளர்த்துக் கொள்ள வேண்டும். குழந்தைகளுடன் இனிப்பு வழங்குதல், பேச்சு போட்டி, பாடல் பாடும் போட்டி, நடன போட்டி மற்றும் சிறு பட்டிமன்றங்கள் போன்ற நிகழ்ச்சிகளும் நடத்தப்படுகின்றது. இதன்வழி, ஒவ்வொரு குழந்தையும் அந்தத் தினத்தன்று மிகவும் மகிழ்ச்சியாக இருப்பதை நாம் உறுதி செய்யலாம். |

Q16 ______________________________

Q17 ______________________________

Q18 ______________________________

Q19 ______________________________

Q20 ______________________________

**'இ' பிரிவு**

**C5 சுயவிடைக் கருத்தறிதல் (30 மதிப்பெண்கள்)**

**பின்வரும் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து அதையொட்டிய வினாக்களுக்கு உன் சொந்த நடையில் விடையை எழுதவும்.**

அருமை தோழி திவ்யா

நலமாக இருக்கிறாயா? உன்னிடம் உரையாடி பல நாட்கள் ஆகிவிட்டன. தமிழ்நாட்டில் இருக்கும் என் பாட்டி உடல்நலம் **குன்றியிருப்பதால்** நானும் என் குடும்பத்தினரும் இந்தியாவுக்குச் சென்று, நேற்றுதான் சிங்கப்பூருக்குத் திரும்பினோம். இப்போது என் பாட்டியின் உடல் நலம் சற்று தேறியிருக்கிறது. தமிழ்நாட்டில் நாங்கள் தங்கியிருந்த அந்த ஒரு வாரத்தில் நான் பல அனுபவங்களைப் பெற்றேன். மேலும், இது ஆடி மாதம் என்பதால் நாங்கள் அங்கு சென்றிருந்தபோது என் பாட்டியின் கிராமமே திருவிழா கொண்டாட்டத்தில் **களைகட்டியது**.

என் அத்தை எங்களுக்காக ஆடி மாத சிறப்பு உணவான கூழ் தயார் செய்து கொடுத்தார். அது மிகவும் சுவையாக இருந்தது. கூழைப் பற்றி என் அத்தையிடம் வினவிய போது அவர் கூழ் என்பது இலங்கையிலும் இந்தியாவிலும் வெப்பம் நிறைந்த பகுதிகளில் அதிக அளவில் உண்ணப்படும் ஓர் உணவு வகை என்று விளக்கினார். கேழ்வரகு (Finger millet), கம்பு (Pearl millet) போன்றவற்றிலிருந்து தயாரிக்கப்படும் கூழ்தான் முந்தைய நாள்களில் தமிழர்களின் **பிரதான** உணவாக இருந்ததாம். இப்போது கேழ்வரகு, கம்பு போன்றவற்றின் **உற்பத்தி** குறைந்துவிட்டதால் மக்கள் கூழை ஆடி மாதம் மட்டுமே அதிகமாக சமைக்கின்றனர் என அத்தை கூறினார்.

அதோடு, மாமா எங்களைத் திருவிழாவுக்கும் அழைத்து சென்றார். இதுபோன்ற திருவிழாக்களைக் காண்பது இதுவே முதல்முறை என்பதால் நானும் என் தங்கையும் உற்சாகம் அடைந்தோம். அங்கு மக்கள் கூட்டம் அலைமோதியதால் என் தங்கை கூட்டத்தில் தொலைந்துவிட்டாள். நல்ல வேளை அவளுக்கு என் மாமாவின் தொலைப்பேசி எண் நினைவில் இருந்ததால் அங்கிருந்த ஓர் ஆடவரின் கைப்பேசி மூலம் எங்களைத் தொடர்புகொண்டு பாதுகாப்பாக எங்களை வந்து சேர்ந்தாள். அதுமட்டுமின்றி, அந்தக் கூட்டத்தில் என் மாமாவின் பணப்பை திருடப்பட்டது. நாங்கள் காவல்துறையினரிடம் புகார் செய்து பணப்பையை மீட்டெடுத்தோம்.

மீண்டும் சிங்கப்பூர் வந்த பிறகு, நான் இணையத்தில் கூழ் செய்யும் முறையையும், கூழின் **<u>நன்மைகளையும்</u>** படித்து தெரிந்துகொண்டேன். கூழில் பல நன்மைகள் இருப்பதால், மக்கள் இன்று அதை நோய்களைத் தீர்க்கும் மருந்தாக உட்கொள்கின்றனர். கூழில் சேர்க்கப்படும் பொருட்கள் மிகுந்த ஊட்டச்சத்து (Nutrition) வாய்ந்தவை. அதாவது, **சர்க்கரை நோயாளி**கள் தங்கள் இரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவைக் குறைப்பதற்காகக் கேழ்வரகு கூழ், களி,

ரொட்டி போன்றவற்றைச் செய்து உண்ணலாம், நண்பா. அதுமட்டுமல்லாமல், நம்மை போன்ற இளைஞர்கள் கூட கூழ் குடிப்பதன் மூலம் உடல் எடையை குறைக்கலாம். அடுத்தமுறை நீ என் வீட்டுக்கு வரும் போது நான் உனக்காக கூழ் சமைத்து தருகிறேன்.

உன் அன்பு தோழன் குகன்.

**வினாக்கள்**

Q21 ஏன் பல நாட்களாக குகன் திவ்யாவிடம் உரையாடவில்லை? இப்போது அவன் இந்த மின்னஞ்சலை எழுத காரணம் என்ன? (5 மதிப்பெண்கள்)

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

Q22 பனுவலை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றும் சரியா தவறா என்று எழுதவும். பின்னர், உன் விடைக்குரிய காரணத்தையும் எழுதவும்.

(5 மதிப்பெண்கள்)

| வாக்கியம் | சரி/தவறு | காரணம் |
|---|---|---|
| பாட்டியின் கிராமம் எப்போதுமே கலை கட்டியிருக்கும். | (A) | (B) |
| தமிழ்நாட்டில் குகன் கூழ் சாப்பிட்டான். | (C) | (D) |

Q23 கூழின் வரலாற்றைப் பற்றி அத்தை என்ன கூறினார்? (5 மதிப்பெண்கள்)

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

Q24 திருவிழாவில் குகனும் அவனது குடும்பத்தினரும் என்ன சிக்கல்களை எதிர்நோக்கினார்கள்? அவர்கள் அச்சிக்கல்களை எவ்வாறு எதிர்கொண்டார்கள்? (6 மதிப்பெண்கள்)

| **சிக்கல்** | **எதிர்கொண்ட முறை** |
|---|---|
| (A) | (B) |
| (C) | (D) |

Q25 கூழை உண்பதின் நன்மைகள் யாவை? (6 மதிப்பெண்கள்)

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

Q26 1-ஆம் பத்தியில் 'முன்னேறியிருக்கிறது' என்னும் பொருளை உணர்த்தும் சொல்லைக் கண்டறிந்து எழுதவும். (1 மதிப்பெண்)

_______________________

Q27 3-ஆம் பத்தியில் சோர்வு ஏற்படாத நிலையை எந்தச் சொல் உணர்த்துகிறது? (1 மதிப்பெண்)

_______________________

பின்வரும் சொல் பனுவலில் இடம்பெற்றுள்ளது. அவை உணர்த்தும் பொருளை எழுதவும்.

(1 மதிப்பெண்)

Q28 நன்மைகளையும் - _______________________